உலக சோசலிச வலைத் தளம் www.wsws.org

# இலங்கை சோசலிச சமத்துவக் கட்சி உலகப் போர் அச்சுறுத்தல் பற்றி யாழ்ப்பாணத்தில் பொதுக் கூட்டம் நடத்தவுள்ளது

**1 september 2014**

இலங்கை சோசலிச சமத்துவக் கட்சி (சோசக) மற்றும் சமூக சமத்துவத்துக்கான அனைத்துலக இளைஞர் மற்றும் மாணவர் (IYSSE) அமைப்பும், அமெரிக்காவின் "ஆசியா நோக்கிய திருப்பமும்" உலகப் போர் அச்சுறுத்தலும் என்ற தலைப்பில் செப்டெம்பர் 07 அன்று யாழ்ப்பாணத்தில் ஒரு பொது கூட்டத்தை நடத்தவுள்ளன.

முதலாம் உலகப் போர் வெடித்து நூறு ஆண்டுகளின் பின்னரும் இரண்டாம் உலகப் போர் தொடங்கி 75 ஆண்டுகளின் பின்னரும், அமெரிக்காவும் ஏனைய ஏகாதிபத்திய சக்திகளும், இம்முறை அணு ஆயுதங்களுடன், மனித இனத்தை மீண்டும் ஒரு உலகப் போர் பேரழிவை நோக்கி தள்ளிச் செல்கின்றன. ஒரு பாசிச தலைமையிலான ஆட்சி கவிழ்ப்பின் மூலம் உக்ரேனில் ஒரு அதிதீவிர வலதுசாரி ஆட்சியை நிறுவிய பின்னர், அமெரிக்கா மற்றும் ஜேர்மனியும் ரஷ்யாவை ஒரு அரை காலனியாக கீழிறக்கும் நோக்கிலான மோதலுக்கு ஈவிரக்கமற்று ஆத்திரமூட்டுகின்றன.

ஒபாமா நிர்வாகமானது சீனாவை சுற்றிவளைப்பதை இலக்காகக் கொண்டு ஆசியாவில் திட்டமிட்டு இராணுவ உடன்பாடுகளை தீவிரமாக கட்டியெழுப்பி வருகின்றது. ஆசியாவில் "முன்னிலை" என்ற அமெரிக்க கொள்கை, இந்தியா மற்றும் இலங்கை உட்பட ஒவ்வொரு நாட்டையும் நீர்ச்சுழலுக்குள் இழுத்துப் போடுகின்றது. வாஷிங்டன் இலங்கை அரசாங்கத்தை பெய்ஜிங்கில் இருந்து தூரவிலக நெருக்குவதற்காக யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை பயன்படுத்தி வருகிறது.

அமெரிக்கா மற்றும் ஏனைய ஏகாதிபத்திய சக்திகளின் ஆதரவுடன், இஸ்ரேல் காசா பகுதியில் பாலஸ்தீனியர்களுக்கு எதிராக ஒரு இனப்படுகொலை போரை நடத்திவருகிறது. "நடுநிலை" என்ற பாசாங்குக்கு பின்னால், இந்திய மற்றும் இலங்கை அரசாங்கங்கள், இஸ்ரேலிய படுகொலைகளையும் பாலஸ்தீன எதிர்ப்பையும் ஒன்றாகக் காட்டுவதன் மூலம் இஸ்ரேலை மூடிமறைக்கின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியம் பரந்த போர்களுக்கு வழிவகுக்கும் வெடிநிலைக்கு மத்திய கிழக்கை மாற்றியுள்ளது.

போருக்கான உந்துதலை தடுத்து நிறுத்துவதற்கான ஒரே வழி, முதலாளித்துவத்தை தூக்கி வீசுவதற்கு ஒரு சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் சர்வதேச தொழிலாள வர்க்கத்தை ஐக்கியப்படுத்துவதே ஆகும். உலகம் முழுவதிலும் உள்ள தொழிலாளர்களை ஒன்றுபடுத்தி, ஒரு சர்வதேச போர் எதிர்ப்பு இயக்கத்தை கட்டியெழுப்புவதானது இன்றைய அவசரமான பணியாகும். சோசக மற்றும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவில் உள்ள அதன் சகோதர கட்சிகளும் மட்டுமே இந்த முன்னோக்குக்காக போராடுகின்றன. இந்த முக்கியமான அரசியல் பிரச்சினைகள் பற்றி கலந்துரையாட யாழ்ப்பாணத்தில் நடக்கவுள்ள எமது கூட்டத்திற்கு வருகை தருமாறு தொழிலாளர்கள், இளைஞர்கள், புத்திஜீவிகள் மற்றும் WSWS வாசகர்களுக்கும் நாம் அழைப்பு விடுக்கின்றோம்.

**தேதி: ஞாயிற்றுக்கிழமை, செப்டம்பர் 07**

**நேரம்: மாலை 2 மணி**

**இடம்: யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்– இண்டாம் மாடி**

**உழைக்கும் மக்களின் ஒரே குரல் உலக சோசலிச வலைத் தளம்**

தொடர்புகளுக்கு : editor@wsws.org

**உலக யுத்த அபாயத்திற்கு எதிராக சோசலிச சர்வதேசிய அடித்தளத்தில் போர் எதிர்ப்பு இயக்கத்தை கட்டியெழுப்புவதற்கு போராடும் ஒரே வெளியீடு**

©World Socialist Web Site http://www.wsws.org